

FREE EDITION

May - 2018

# ஜோதி

Jothi
Spiritual Newsletter

ஜோதி 12 : சுடர் 03 - 135

ஆன்மிகச் செய்திச்சுடர்

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**அணுசக்தியும், ஆன்மிக சக்தியும்:**

"அணுசக்தியினால் தெய்வ சக்தியையும், ஆன்மிக சக்தியையும் விஞ்சிவிட முடியாது. அணுசக்தியினால் அவற்றை ஒன்றும் செய்துவிட முடியாது. பாமர மக்களை அழிக்கத்தான் அணு ஆயுதங்களைக் கண்டு பிடித்தானே தவிர காட்டில் உள்ள விலங்குகளை அழிக்க அல்ல!".

**தெய்வ அருள் இல்லாமல் நடக்காது:**

"எந்த வரி போட்டாலும், எந்தச் சட்டத்தைத் திருத்தினாலும் வருகிற ஆபத்துக்களைத் தடுக்க முடியாது. இறைக்கிற கிணறுதான் சுரக்கும். சுரக்கிற கிணறுதான் இறைக்கும். அதற்கும் இயற்கையின் துணை வேண்டும். மழை வேண்டும். இந்த இரண்டும் கிடைக்கத் தெய்வ அருள் வேண்டும்."

**அன்னையின் அருள்வாக்கு**

# எங்கெங்கு காணினும் சக்தியடா!

## எல்லாத் தெய்வமும் அவளே!

அத்வைதக் கோட்பாடு காட்டும் பரம்பொருளை ஆதிசங்கரர் அம்பாளாக தாய்த் தெய்வமாக, சக்தியாக உணர்ந்தார். இந்தப் பிரபஞ்சத்தை இயக்குபவளும், பிரபஞ்சமாக இருப்பவளும் அவளே! ஒவ்வொரு ஜீவராசியின் உள்ளுறைபவள் அவளே! எல்லாத் தெய்வமாக இருப்பவளும் அவளே என்பது ஆதிசங்கரரின் கருத்தாகும்.

## தத்வமசியின் பொருளை உணராதார்

தத்வமசி என்ற வடமொழிப்பதத்திற்கு 'நீ அதுவாக இருக்கிறாய் என்பது பொருள். அதாவது ஒவ்வொரு ஜீவராசியுள்ளும் பரம்பொருள் உறைகிறது என்பது பொருள். பரம்பொருள் உன்னிடத்தில் உண்டு என்பதால் சிலர் 'நீயே கடவுள். உள் முகமாகக் கடவுளை உன்னுள்ளே காணலாம். கோவிலுக்குப் போகாதே. உன்னுள்ளே கடவுள் (பரம்பொருள்) இருக்கும்போது கடவுளை நாடிக் கோவிலுக்குச் செல்லாதே. நீயே பரம்பொருள்'என்றெல்லாம் தத்வமசி என்பதற்குத் தவறான விளக்கம் சொல்லிச் சிலரை அம்முறையில் வெளிப்படுத்துகின்றனர். நாமே கடவுள் என்பதால் நமக்குச் செவ்வாடை எதற்கு? குரு எதற்கு? வழிபாடு எதற்கு? என்று என்னிடம் சிலர் கேட்டனர்.

**டாக்டர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்**
கோவை

## எனது விளக்கம்

தத்வமசி என்பதற்கு 'நீயே பரம்பொருள்' என்பது பொருளல்ல. பரமாத்மாவிலிருந்து வந்ததே ஜீவாத்மா என்ற கருத்தை உள்ளடக்கியதே தத்வமசி. ஜீவாத்மா தன்னைத் தூய்மையாக்கிக் கொண்டு மாயையிலிருந்து விடுபட்டுப் பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்துவிடும் என்பது அத்வைதம். இத்தத்துவங்களையெல்லாம் உள்ளடக்கியது தான் தத்வமசி. நீயே பரம்பொருள். உனக்குக் கோவிலும் வழிபாடும் தேவையில்லை என்பதல்ல.

## கடலும் சொட்டு நீரும்

கடலில் முழங்கால் அளவு நீரில் நின்றுகொண்டு ஒருவன் கையில் கடல் நீரை அள்ளிப் பிறகு கீழே விட்டான்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

"இயற்கை வழிபாடு, சக்தி வழிபாடு, தாய், தந்தை வழிபாடு என்ற வழிபாட்டு உணர்ச்சி வளர்ந்தால்தான் உனக்கு நல்ல வழிகாட்டியாகத் தெய்வம் அமையும்."

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான ‘சக்தி ஒளி’ மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக ”ஜோதி” ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: “Jothi Sudar”**

## செய்திச்சுடரில்...


**எங்கெங்கு காணினும் சக்தியடா!**
Page: 1 – 6

**மலரினில் பூத்த மரம்**
Page: 7 - 9

UPCOMING EVENTS
Melbourne: 11, 13
Sydney: 8, 10

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 3

**துன்பம் கொடுத்த எந்திரத்தகடு**
பக்கம்: 14 - 15

**அருள்வாக்கும் அனுபவங்களும்:**
Page:11

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 12

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16


# எங்கெங்கு காணினும். .

(1ஆம் பக்க தொடர்ச்சி)

அவன் சுண்டு விரலில் கடல் நீரின் ஒரு சொட்டு நின்றது. அவன் கண்முன் பரந்திருப்பது கடல்நீர். அவன் சுண்டுவிரலில் சொட்டாக நிற்பதும் கடல்நீர்தான்.

கடலுக்குள்ள குணம் அந்தச் சொட்டு நீருக்கும் உண்டு. இரண்டும் திரவம்தான். இரண்டும் உப்புக் கரிக்கும் என்றாலும் சொட்டுநீர் கடலாகாது. கடலில் பெரிய பெரிய கப்பல்கள் மிதந்து போகின்றன. திமிங்கிலம் முதல் சிறிய உயிரினங்கள் வரை கோடிக்கணக்கான ஜீவராசிகள் வாழ்கின்றன. சொட்டு நீரில் இது இல்லை. என்றாலும், சுண்டு விரலில் நிற்கும் சொட்டு விரலைவிட்டுக் கீழே விழுந்தால் கடலினுள் கலந்து கடலாகிவிடும்.

கடலுக்கும் அதன் சொட்டு நீருக்கும் உள்ள தொடர்பைப் போன்றது தான் பரம்பொருளுக்கும், ஜீவாத்மாவிற்கும் உள்ள தொடர்பு! கடல் தான் பரம்பொருள். அதன் சொட்டு நீர்தான் ஜீவாத்மா.

## இரண்டறக் கலத்தல்

எனவே, பரமாத்மாவிலிருந்து பிரிந்து வந்த ஜீவாத்மா பரம்பொருளின் குணங்களாகிய அருள், அன்பு, இரக்கம் போன்ற நற்குணங்களைப் பெற்றிருக்கிறது. சொட்டு நீர் திரவமாகவும், கரிப்புச் சுவை கொண்டதாகவும் இருப்பது போன்றது இது.

பரம்பொருளுக்கில்லாத பொறாமை, மோசம் செய்தல், கொலை, களவு போன்ற தீய குணங்கள் ஜீவாத்மாவிற்கு இருக்கின்றன. சொட்டு நீர் சொட்டாக(சிறுமை)வும், அலைகளின்றியும், உயிரினங்களின்றியும் இருப்பதைப் போன்றது இது.

தீய குணங்களை அறவே நீக்கி ஜீவாத்மா தூய்மை அடையும்போது கடலில் சொட்டு நீர் இரண்டறக் கலந்து விடுவது போலப் பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்துவிடுகிறது.

## பொருந்தாத பொருள்

பரம்பொருளின் சில குணங்களாவது ஜீவாத்மாவிடம் இருப்பதால் தான் நீ அதுவாக இருக்கிறாய் (தத்வமசி) எனப்பட்டது.

அதுவாக இருக்கும் ஜீவாத்மா அதுவாகவே மாற (இரண்டறக்கலக்க) குருநாதர் தேவை, கோவில் தேவை, செவ்வாடை தேவை, ஆன்மிகப் பயிற்றுநர்-பயிற்சிகள் தேவை. இதையறியாது தத்துவங்களைத் தவறாக உணர்ந்து உன்னுள்ளே கடவுள் இருக்கிறது, நீயே கடவுள், உனக்குக் கோவில் தேவையில்லை, வழிபாடு தேவையில்லை என்று சாதாரண மக்களுக்குச் சொல்வது பொருந்தாது.

## எளிமை, எளிமை, எளிமை

இப்படி அனைத்து ஜீவராசிகளிடமும், அணுவிலும், அகண்டத்திலும், அனைத்திலும் உறைவது சக்தியே என்று அருள்திரு அம்மா அவர்கள் மிக எளிய முறையில், ஒரு பக்தருக்கு, அவராகவே தெரிந்து கொள்ளும் வகையில் அவரை நெறிப்படுத்தினார்கள்.

அம்மா அவர்கள் தொண்டர்கள் மத்தியில் பேசுவதும் எளிமை. அவ்வாறு அம்மா அவர்கள் அந்தப் பக்தரை நெறிப்படுத்தி அவராகவே ஆன்மிகத் தத்துவத்தை எளிமையாக உணரச் செய்த சம்பவத்தை இங்கே எழுதுகிறேன்.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

அம்மா! தொழிலில் வரும் லாபத்தில் குரு காணிக்கை எடுத்து வைத்து வருகிறேன். அ) அதை நேரில் வந்து அம்மாவிடம் செலுத்துவதா? ஆ) அம்மாவின் அவதாரநாளன்று அம்மாவின் பாதங்களில் சமர்ப்பிப்பதா? இ) முறைப்படி சமுதாயப்பணிகளுக்குச் செலவிடும் துணை ஆலயத்தில் சமுதாயப் பணிக்குச் செலுத்துவதா?

குரு காணிக்கை என்று நீங்களே எழுதி இருக்கிறீர்கள். சேமித்து வைத்திருப்பதாகவும் எழுதி இருக்கிறீர்கள். முடிந்தால், வரும் சமயங்களில் குருவின் பாதங்களில் சமர்ப்பிக்கலாம். அடிக்கடி வர முடியாவிட்டால், மொத்தமாகக் குருவின் அவதாரத் திருநாளன்று குருவின் பாதங்களில் சமர்ப்பிக்கலாம். ஆனால் திருப்பதி உண்டிக்காசை வட்டி போட்டு செலுத்துவதாக எடுத்துச் செலவு செய்து விடுவது போல குரு காணிக்கையைச் செலவு செய்து விடக்கூடாது. குரு காணிக்கை என்று தனியாக எடுத்து வைத்துவிட்டால், குருவிடம்தான் காணிக்கையாகச் செலுத்த வேண்டும். சமுதாயப் பணிக்குச் செலவு செய்ய நினைத்தால் வேறு பணத்தைச் செலவழிக்கவும்.

# எங்கெங்கு காணினும். .

(2ஆம் பக்க தொடர்ச்சி)

## அம்மா அவர்களும் அன்னையும்

அம்மா அவர்களின் ஆசியாலும், அன்னையின் அருளாலும் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கம் அருகுபோல் வேரோடி ஆல்போல் தழைத்தோங்குகிறது. குருபிரான் அவர்களும், அம்மா குடும்பத்தினரும் ஆன்மிகம் அறியாத மக்களுக்கு ஆன்மிகத்தைத் தரப்படுகின்ற பாட்டினையும், அன்னை ஆதிபராசக்தி பக்தர்களுக்குச் செய்கின்ற அற்புதத் திருவிளையாடல் நன்மைகளையும் மக்கள் அனைவருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

1997 ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் அம்மா அவர்கள் நெல்லை, சிதம்பரனார், கன்னியாகுமரி மாவட்டங்களில் ஆன்மிகப் பயணத்திற்காகச் சென்றவிடமெல்லாம் மழை கொட்டோ கொட்டென்று கொட்டியது. பாதம் பதிந்த இடமெல்லாம் இன்று பசுமை தழைத்துள்ளதென்பதும், மேலகரம் சீதாராமையர் மகளுக்குப் பார்த்த வரனை போர்க்காலத்தில் அம்மா அவர்கள் குவைத்திலிருந்து விமானத்தில் அழைத்து வந்தார்கள் என்ற செய்தியும் யாருக்குத் தெரிகிறது?

உடுமலைப்பேட்டை தேவராசன் வயிற்றுவலி தாங்க முடியாமல் இரவு இரண்டு மணிக்குத் தற்கொலை செய்துகொள்ளக் கிணற்றில் விழும்போது, அவருடைய மாமியார் உருவில் அன்னை ஆதிபராசக்தி வந்து அவர் கையைப் பிடித்திழுத்து அவரை வீட்டிற்கு அனுப்பிக் காத்தது யாருக்குத் தெரியும்?

அருள்திரு அம்மா அவர்களும், அன்னை ஆதிபராசக்தியும் பக்தர்களுக்குச் செய்யும் அருட்செயல்களான அற்புதங்களை அகிலம் முழுதும் பரப்ப வேண்டும்.

## விளம்பரமும் பிரச்சாரமும்

நடைபெறும் நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்துவதும் அதுபற்றிப் பிரச்சாரம் செய்வதும் இன்றைய உலகில் அவசியமாகிறது.

அம்மா அவர்களும், ஆதிபராசக்தி அன்னையும் செய்கின்ற அற்புதங்களாகிய நன்மைகள் சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம் போன்ற நகரங்களுக்குத் தெரிகின்றன. ஆனால், கிராமங்களுக்குப் போய்ச் சேர்வதில்லையே..!

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

# எங்கெங்கு காணினும்..

(3ஆம் பக்க தொடர்ச்சி)

எல்லா இடங்களிலும் அம்மா பற்றியும், அன்னை பற்றியும், ஆதிபராசக்தி இயக்கம் பற்றியும், உண்மைகளை எடுத்துக் கூறப் பெருத்த எண்ணிக்கையில் பேச்சாளர்கள் வேண்டும்.
பொதுப்பணித்துறையில் துணைப் பொறியாளராகப் பணியாற்றும் பழனிமுருகன் என்பவர் அன்னையினுடைய சிறந்த பக்தர். ஆலயத்தில் பல தொண்டுகளில் பங்கெடுத்துக்கொண்டவர்.

## ஐயப்ப பக்தர்

பழனிமுருகன் அம்மாவிடம் வருவதற்கு முன் தீவிர ஐயப்ப பக்தராக இருந்தவர். 1969 ஜனவரி முதல் ஆண்டுதோறும் தவறாது இருமுடி கட்டி சபரிமலைக்குச் சென்று வந்தவர். அம்மாவிடம் வந்த பிறகு சபரிமலை செல்வதை விட்டுவிட்டார். ஆனால் சபரிமலைக்கு முன்போல் சென்று இருமுடி அபிடேகம் செய்து வர வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. 'சரி! இதை அம்மாவிடமே கேட்டுவிடலாம்' என்று முடிவு செய்தார்.

## செவ்வாடையில் போய் வா!

சக்தி பழனிமுருகன் அம்மாவை அருட்கூடத்தில் தட்டு வைத்துப் பார்த்தார். அப்போது "நான் ஐயப்பன் கோயிலுக்குச் சென்று இருமுடி செலுத்தி வருவது உண்டம்மா! நான் மறுபடியும் சபரிமலை சென்று ஐயப்பனுக்கு இருமுடி செலுத்தி வருகிறேனம்மா!"என்று கேட்டார். அதற்கு அம்மா அவர்கள் "சரி போயிட்டு வா!"என்று கூறிவிட்டு ஒரு கட்டளையிட்டார்கள். "நீ செவ்வாடையில் போய்த் திரும்பி வா!" என்று சொன்னார்கள். ஐயப்பன் சபரிமலைக்கு கறுப்பு ஆடை, ஆரஞ்சு ஆடை, நீலநிற ஆடை இவற்றில்தான் போய் வருவார்கள். ஆனால் பழனிமுருகன் அம்மாவின் கட்டளையைச் சிரமேற்கொண்டு செவ்வாடை உடுத்தி அந்த ஆண்டு சபரிமலை சென்று ஐயப்பனுக்கு நெய் அபிடேகம் செய்து வந்தார்.

## என்ன பார்த்தே?

அடுத்த ஆண்டும் பழனிமுருகன் சபரிமலை சென்று ஐயப்பனுக்கு இருமுடி செலுத்த உத்தரவு கேட்பதற்காக அம்மாவிடம் வந்தார். "அம்மா இவ்வாண்டும் சபரிமலை சென்று வர ஆசி வழங்க வேண்டும் அம்மா" என்று காலில் பணிந்து எழுந்தார்.

"சரி போயிட்டு வா! என் ஆசி உண்டு"என்று அம்மா சொன்னார்கள். 'ஆசியுண்டு'என்று அம்மா சொன்னார்கள். 'ஆசியுண்டு'என்று சொல்லிவிட்டு ஒன்று கூறினார்கள். "நீ போயிட்டு வந்த பிறகு நீ போன இடங்களிலெல்லாம் என்ன பார்த்தே என்பதை என்னிடம் வந்து சொல்ல வேண்டும்!"என்று கூறினார்கள்.

பழனிமுருகன் மிக சந்தோஷத்துடன் "சரிம்மா! வந்து சொல்கிறேன்!"என்று தாள் பணிந்தார். "சரி போய் வா!"என்று அம்மா உத்தரவு கொடுத்தார்கள்.

## குருவாயூர்

அப்போது பழனிமுருகன் பெரியார் மாவட்டம் அந்தியூரில் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் வழக்கமாகச் சபரிமலை செல்லும் குழுவினருடன் இருமுடி கட்டி செவ்வாடையில் புறப்பட்டார்.

முதலில் ஐயப்பன்மார் கோயம்புத்தூர் வந்து அங்கிருந்து குருவாயூருக்குச் சென்றனர். அன்று காலையில் எல்லோரும் குருவாயூரப்பனைத் தரிசித்து வணங்கக் கோவிலுக்குள் சென்றனர். பழனிமுருகனும் கோவிலின் உள்ளே சென்று குருவாயூரப்பனைத் தரிசித்தார். குருவாயூரப்பன் செம்பட்டுடுத்தி வெகு அலங்காரமாகக் காட்சியளித்தார்.

## சோட்டானிக்கரை

அடுத்தது ஐயப்பன்மார் சோட்டானிக்கரை சென்றனர். அங்கு பகவதியம்மன் கோவிலுக்குச் சென்று அம்மனைத் தரிசித்தார்கள். அங்கு பகவதியம்மனுக்குச் சிவப்புப் பட்டுடுத்தி அழகு செய்திருந்தார்கள்.

## சபரிமலையிலும்...

சோட்டானிக்கரையிலிருந்து நேரே சபரிமலைக்குச் சென்றார்கள். சபரிமலையை அடையும்போது இரவாகிவிட்டது. ஐயப்பன் கோவிலில் அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடுவார்கள்.

இரவு நடை சாத்துவதற்கு முன் அரிவராசனம் பாடித்தான் நடை சாத்துவார்கள். ஒவ்வொரு நாளும் நெய் அபிடேகம் முடிந்த பின் ஐயப்பனுக்கு அலங்காரம் செய்துதான் நடை சாத்துவார்கள். அன்று நடை சாத்துவதற்காக அரிவராசனம் பாடத் துவங்கினார்கள்.

(தொடர்ச்சி..5ஆம் பக்கம்)

# எங்கெங்கு காணினும். .

(4ஆம் பக்க தொடர்ச்சி)

பழனிமுருகன் அப்போது ஐயப்பனைத் தரிசனம் செய்யச் சந்நிதிக்குச் சென்றார். பக்தியுடன் ஐயப்பனைக் கைகூப்பிக் கண்களால் பருகினார். அப்போது ஐயப்பனும் தூய செம்பட்டுடுத்தியிருக்கக் கண்டார்.

## நீல வஸ்திரதாரியே..

ஐயப்பன் படங்களில் நீலவண்ணப் பட்டுடுத்தித் தான் ஐயப்பன் காணப்படுகிறார். "நீல வஸ்திரதாரியே! சரணம் ஐயப்பா!"என்றுதான் கூப்பிடுவார்கள்.

ஐயப்பனை வணங்கும்போதும் பக்தர்கள் சிவப்பு வஸ்திரதாரியே என்று சரணம் கூப்பிடுவதுமில்லை.

ஐயப்பனுக்குச் செவ்வாடை இருக்க வாய்ப்பே இல்லை. நம் பழனிமுருகன் இதுவரை ஐயப்பனுக்குச் சிவப்பு உடுத்திப் படத்திலும் பார்த்ததில்லை. அப்படிப்பட்ட ஐயப்பன் சிவப்பு உடுத்தியிருந்ததைப் பார்த்ததும், அவருக்கு எங்கோ பொறி தட்டியது. கொஞ்சம் பயமும், இதை மீண்டும் நன்கு கவனிக்க வேண்டும் என்ற உந்துதலும் ஏற்பட்டன.

## குற்றாலம்

சபரிமலையிலிருந்து குற்றாலம் சென்றார்கள். அங்கேயும் குற்றாலநாதர் சிவப்புப் பட்டு உடுத்திக் காட்சியளித்ததைப் பழனிமுருகன் கண்டார். குற்றாலத்தில் சிவலிங்கத்திற்கு அருவிக்கரைத் துண்டு உடுத்துவார்கள். இது காவி நிறத்திலிருக்கும் அல்லது வெள்ளை ஆடை உடுத்துவதும் உண்டு. அன்று சிவலிங்கத்திற்குச் செவ்வாடை சாத்தியிருந்தார்கள். அது மட்டுமல்ல. குற்றாலநாதருடன் அம்மனுக்கும் செவ்வாடையிலேயே அலங்காரம் ஆகியிருந்தது.

## இராமேசுவரம்

குற்றாலநாதரையும், அம்மனையும் செவ்வாடையில் தரிசனம் செய்தபின் ஐயப்பன்மார் நேரே இராமேசுவரத்திற்குப் பயணமானார்கள். இப்போதெல்லாம் கோவிலுக்குள் நுழையும்போதே பழனிமுருகன் தெய்வதத்திற்கு என்ன ஆடை உடுத்துகிறார்கள் என்று கவனிக்க வேண்டும் என்ற நினைவுடனேயே நுழைந்தார். இராமேசுவரத்திலும் சுவாமிக்கும் செவ்வாடை, அம்மனுக்கும் செவ்வாடை இருப்பதைக் கண்டு தரிசனம் செய்தார்.

## மதுரை

அடுத்து மதுரைக்கு வந்தார்கள். அங்குமீனாட்சி அம்மன் ஆலயத்திற்குச் சென்றார்கள். மீனாட்சி அம்மனைத் தரிசித்தார்கள். மாணிக்க மூக்குத்தி கொண்ட மதுரை மீனாட்சிக்கு உகந்தது பச்சைப் புடவைதான். பணம் கொடுத்து மீனாட்சி அம்மனை அருகில் சென்று பழனிமுருகன் தரிசனம் செய்தார். அம்மனை நன்கு உற்றுப் பார்க்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. பெரும்பாலும் பச்சைப்பட்டு உடுத்தும் மீனாட்சி அம்மனுக்கு அன்று சிவப்புப் பட்டு உடுத்தியிருந்தது.

## வேடிக்கை

போன இடங்களில் எல்லாம் பக்தர்களும், ஐயப்பன்மார்களும், மற்றவர்களும் பழனிமுருகனையே உற்று உற்றுப் பார்த்தார்கள். ஒரு வேடிக்கைப் பொருளைப் பார்ப்பது போல இவரை ஒரு தினுசாகப் பார்த்தார்கள்.

என்ன ஐயப்பன் மலைக்குச் செல்பவர்கள் எல்லோரும் கருப்பு, நீலம் அல்லது ஆரஞ்ச் நிறத்தில் உடை அணிந்து வருவார்கள். இவன் மட்டும் சிவப்பு உடையில் வந்திருக்கிறானே என்று வேடிக்கையாகப் பார்த்தனர். ஆனால் அது பற்றி இவர் ஒன்றும் கவலைப்படவில்லை.

## சமயபுரம்

மதுரையிலிருந்து சமயபுரத்துக்கு வந்தார்கள். சமயபுரத்தம்மனுக்குச் சிவப்புக் கட்டுவதில் ஆச்சரியம் இல்லை. அடிக்கடி அங்கு அம்மனுக்குச் சிவப்பு உடுத்துவது உண்டு. வேறு நிறங்களிலும் சமயபுரத்தம்மனுக்கு ஆடை அலங்காரம் செய்வதுண்டு. ஆனால் பழனிமுருகன் போய்த் தரிசனம் செய்த அப்போது சமயபுரத்தம்மன் சிவப்பாடை உடுத்தியிருந்தது.

## பழனி

சமயபுரத்திலிருந்து பழனிக்கு வந்தார்கள். முருகனைத் தரிசிக்க மலை ஏறினார்கள். இவர்கள் போனபொழுது பழனிமுருகன் தங்கரதத்தில் உலா வந்து கொண்டிருந்தார். அப்போது பழனி முருகனும் செம்பட்டு உடுத்தி இருந்தார். நம் பழனிமுருகன் கண்டு தரிசித்தார்.

## ஒரே சக்தி தான்

அப்போது பழனிமுருகனுக்குப் புரிந்தது. அன்னை தான் எல்லா இடங்களிலும் எல்லாத் தெய்வ வடிவங்களிலும் இருக்கறது.

(தொடர்ச்சி..6ஆம் பக்கம்)

# எங்கெங்கு காணினும். .

(5ஆம் பக்க தொடர்ச்சி)

ஆதிபராசக்தி வேறு வேறு இடங்களிலும் மாறுபாடான தோற்றத்தில் இருந்தாலும் அது ஒரே சக்திதான்! எங்கும் இருப்பது அந்தப் பராசக்தி என்பது நெற்றிப் பொட்டில் அடித்தாற்போல பழனிமுருகனுக்கு விளங்கியது. பயணம் முடிந்து பழனிமுருகன் இல்லம் வந்து சேர்ந்தார்.

## என்ன பார்த்தாயா?

சபரிமலைக்குப் போக ஆசி வாங்க வந்தபோது போன இடங்களில் என்ன பார்த்தாய் என்பதை வந்து சொல்லு என பழனிமுருகனுக்கு அம்மா கட்டளையிட்டுள்ளாள் அல்லவா? இருமுடி செலுத்தி இல்லம் வந்ததும் சில நாட்களில் பழனிமுருகன் அம்மாவிடம் சென்றார். அம்மாவின் திருவடிகளில் வணங்கியெழுந்தார். உடனே அம்மா அவர்கள் “ என்ன.. பார்த்தியா?” என்று கேட்டார்கள். போன இடங்களில் என்னென்ன பார்த்தாய் என்று கேட்கிறார்கள் என்று பழனிமுருகன் நினைத்தார்.

## என்னப் பார்த்தியா?

ஆனால் அம்மா அவர்கள் அப்படிக் கேட்கவில்லை என்று அவர்கள் பின்பு அடுக்கடுக்காய்க் கேட்டதிலிருந்து பழனிமுருகனுக்குப் புரிந்தது. “என்ன பார்த்தியா? என்ன பார்த்தியா..? போன இடங்களிலெல்லாம் என்னப் பார்த்தியா..?” பழனிமுருகனுக்கு இப்போது புரிந்தது.

## என்ன பார்த்தாய்?

“ ஆமாம் அம்மா! நான் போன இடங்களிலெல்லாம் உன்னைப் பார்த்தேன்..!” என்றார். பழனிமுருகன். மறுபடியும் அம்மா “ என்ன பார்த்தாய்?” என்றார்கள்.

## உன்னைப் பார்த்தேன்

“ஆமாம்.. உன்னைப் பார்த்தேன். எல்லா இடங்களிலும் நீயே இருப்பதைப் பார்த்தேன். அதை எனக்கு உணர்த்துவதற்காகத்தான் இவ்வளவு இடங்களுக்கும் நீ என்னை அனுப்பி அங்கெல்லாம் செவ்வாடையில் நீயே காட்சியளித்தாய் என்று தெரிந்து கொண்டேனம்மா!” என்றார் பழனிமுருகன்.

## எந்தச் சக்தியும் அந்த ஆதிசக்தியே!

எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அது ஆதிபராசக்தியைத் தான் வணங்குகிறோம். எந்த இறை சக்தியை வணங்கினாலும் அது அந்த ஆதிபராசக்தி மூலந்தான் நமக்கு அருள் கிடைக்கிறது என்பதை என் வாழ்வில் நான் இதற்குப் பிறகு உணர்ந்து கொண்டேன் என்று கண்கலங்க போடிநாய்க்கனூரில் பழனிமுருன் என்னிடம் தெரிவித்தார். எந்தச் சக்தியும் அந்த ஆதிசக்தியே என்பதை அவர் நன்கு புரிந்து கொண்டார்.

## வணங்குவதெல்லாம் ஓம் சக்தியே!

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பக்தர்கள் வேறு கோயில்களுக்குப் போகும் வாய்ப்புகள் ஏற்படுவதுண்டு. விநாயகர் கோவிலில் அல்லது முருகன் கோவிலில் சென்று கர்ப்பக் கிரகத்தின் முன்னின்று தெய்வத்தை வணங்கக் கையெடுக்கும்போது ‘ஓம் சக்தி விநாயகா, ஓம் சக்தி முருகா’ என்று தான் மனம் எண்ணுகிறது.

இந்த அனுபவம் எனக்கு மட்டுமல்ல. ஆதிபராசக்தி பக்தர்கள் எல்லோருமே எந்தக் கோயிலுக்குப் போனாலும் ஓம் சக்தியே என்றுதான் மனம் எண்ணுகிறது என்கிறார்கள். எனவே, ஆதிபராசக்தி பக்தர்கள் எங்குச் சென்றாலும் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் அவர்கள் வணங்குவதெல்லாம் ஓம் சக்தியே!

## எங்கெங்கு காணினும் சக்தியே!

நாத்திகக் கவிஞர் கனகசுப்பு ரத்தினம் என்ற பெயரை உடைய பாரதிதாசன் தான் ஆத்திகராக இருக்கும்போது, “எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி ஏழுகடல் அவள் வண்ணமடா!
தங்கும் வெளியினில் கோடியண்டம் - அந்தத் தாயின் கைப்பந்தென ஓடுமடா!” - -என்று பாடினார்.

ஆத்திகராக இருந்தபோது பாரதிதாசன் அத்வைதத்தின் பொருளை அருமையாக உணர்ந்திருக்கிறார். காண்பதெல்லாம் அவர் சக்தியின் உருவமாகக் கண்டிருக்கிறார். கடலுக்கு வந்துவிட்ட பழனிமுருகன் மழைத்தூறலில் நனையப் போனார். சிறுகுளத்தில் குளிக்கப் போனார். கிணற்று ஊற்றினில் குளிக்கப் போனார். ஆற்றினில் ஆடப் போனார். ஆனால் முந்நீராலும் வேறு எந்நீரானாலும் கடலில் உள்ள இந்நீரே என்று கடைசியில் உணர்ந்துகொண்டார். ஆமாம்! எங்கெங்கு காணினும் சக்தியடா! என்பதை அனுபவப் பூர்வமாக அறிந்து கொண்டார்.

ஓம் சக்தி!

# மலரில் பூத்த மரம்

'ஒரே தாய், ஒரே குலம்', என்ற கொள்கையைச் சமுதாய வாழ்வில் அடிமட்டத்திலுள்ள ஏழை எளியவர் முதல் மக்கள் அனைவருக்கும் உணர்த்தி, தெய்வ உணர்வூட்டும் தொண்டு மனப்பான்மையை வளர்த்தும் வருகின்ற நம் ஆன்மிக குருவின் அவதாரப் பெருவிழா கொண்டாடப்படும் நாள் மார்ச் 3ஆம் நாள், சுயம்பாக அன்னை ஆதிபராசக்தி வெளிப்பட்ட நாளே பங்காரு தெய்வத்தில் அவதாரத் திருநாள் ஆகுமென்பதை அன்னையே உணர்த்திய வழி உணரவும் முடிந்துள்ளது.

தெய்வங்களுக்கெல்லாம் தெய்வமாக விளங்குகின்ற அன்னை ஆதிபராசக்தியே அருள்திரு அடிகளார் என்னும் திருவடிவம் தாங்கி, இந்தக் கலியுகத்து மனிதரெல்லாம் அற்புத தரிசனம் பெறுகின்ற பொன்னான காலத்தில் வாழும் பேற்றைப் பெற்றுள்ளோம்.

பிரபஞ்சத்தின் தாயான பராசக்தி என்ற தெய்வமே குருவாக அவதரித்து, சராசரி மனித நிலைக்கு இறங்கி வந்து, மனித குலத்தின் துயர் போக்கும் உரையாடல் நிகழ்த்தி, வேதனைகள் நீங்க வழிகாட்டி, பாசம் மிகுந்த பக்தியோடு வரும் எல்லோர்க்கும் அம்மாவாக வந்துள்ள ஆன்மிக பீடமாம் சித்தர் பீடம் உயிர்களுக்கெல்லாம் தாய்வீடாக விளங்குகின்றது. மானுடத்தின் சரணாலயமாகவும் மருவத்தூர் பீடம் விளங்கி வருவதை அறியலாம்.

**சக்தி மீனா குமாரி**
குற்றாலம்

சித்தர் பீடத்தை அருள்திரு அம்மா அவர்கள் வலம் வரும்போது, அவர்களின் திருமேனியைக் காண்பவர்களுக்கும், திருவடி தொழுபவர்களுக்கும் பல ஆனந்த அற்புத அனுபவங்கள் கிடைக்கின்றன. சித்தர் பீடம் வந்து அம்மா என்ற ஏக்கக் குரலைப் பக்தியுணர்வோடு எழுப்பும் ஒவ்வொரு ஆன்மாவையும் அடிகளாரின் பார்வை தொடர்ந்து வந்து துயர் துடைக்கிறது. இது சித்தர் பீடம் நாடி வந்த பலரின் அனுபவப்பாடம்.

சித்தர் பீடத்திற்குள் வரும்பொழுதும், அருட்கூடத்தில் அவதாரப் பெருந்தெய்வமாம் அருள்திரு அடிகளாரின் திருவடி தொழும் பொழுதும் மட்டும்தான், அவர்களின் ஆசியையும் அருளையும் பெறுகிறோமா? அவர்களின் பாதம் பார்த்து தொழுத உயிருக்கும், பாதம் பட்ட மண்ணிற்கும், மலருக்கும், நீருக்கும் கூட எத்தனை மகத்துவம் உள்ளது என்பதை ஆயிரக்கணக்கான பக்தர்களின் அனுபவங்கள் மூலம் நாள்தோறும் உணர வைத்து வருகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் நல்லுணர்வுகளை ஊட்டி, இந்தக் கலியுகத்து மனித ஆன்மாக்களின் கரும வினைகளை நீக்கி அமைதியும், நிம்மதியும் பெற்று ஒன்றுபட்டு வாழ உயரிய சக்திநெறி புகட்டி வாழ்விக்க வந்த அம்மா அவர்கள் ஆன்மிக குருவென்ற வடிவில், ஒவ்வொரு நாளும் பொழுதும் மானுடத்தின் அன்றாட வாழ்வை நெறிப்படுத்திக் காக்கும் அவதாரத்தாய் நிகழ்த்தும் அற்புதங்கள் ஏராளம்.

தான் படைத்த பிரபஞ்சத்தின் உயிரினங்கள் தம் கருமவினையால் படும் துன்பங்களிலிருந்து விடுபடவும், அமைதியையும் தர்மத்தையும் நிலை நாட்டவும் வேண்டிய ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தில் தெய்வஅவதாரம் நிகழ்வதுண்டு.

இந்தக் கலியுகமாகிய கண்ணீர் யுகத்தின் கயமைகளைப் போக்கி கடமையுமாக, களிப்பு - யுகமாக ஆக்கும் பொருட்டுப் பரம்பொருளாகிய அன்னை ஆதிபராசக்தியே மானிட உருக்கொண்டு குருவாக அவதாரம் தாங்கி வந்துள்ள அற்புதமான காலம் இது.

ஆன்மிகம் என்ற உணர்வை வளர்க்கும் சிந்தனைக்கு வித்திடாத இன்றைய கல்வி, விஞ்ஞானம், ஆராய்ச்சி, அரசியல், பொருளாதாரம் மற்றும் தொழில்கள் அனைத்துமே சுயநலத்தின் அடிப்படையிலேயே வளர்ச்சி பெற்று, மனித நேயமற்ற, சமூகச் சிந்தனைக்கு இடம் தராத, இயற்கையின் அற்புதம் உணராத, கல்மரங்களாய் மனித மனங்களைத் தடம் மாறிவருகின்ற நிலையை அறிய முடிகிறது.

இத்தகைய நெருக்கடி மிகுந்த வேதனைகள் சூழ்ந்த காலகட்டத்தில், தன் ஒளிபடைத்த பார்வையால், அருள்கனிந்த இனிய மொழிகளால், பாதம் தொட்ட பாக்கியத்தால், பாதத்தீர்த்தத்தால் தீராத வினை தீர்த்து, போகாத துயர் போக்கி, அழியாத கரும வினைகளை அழித்து மனித குலம் வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்கும் வண்ணம் வழிகாட்டி வாழ்விக்க வந்த தெய்வம் நம் பங்காரு தெய்வம்.

'அடிகளாரின் பார்வைக்கும், பாதம் பட்ட மண்ணிற்கும் மகிமையுண்டடா மகனே!'என்ற அருள்வாக்கின் ஆழத்தை, அறிய வைத்து வருகின்ற அருமையை, புரிய வைக்கும் அற்புத நிகழ்வுகளை நினைக்கும்பொழுதெல்லாம் நெஞ்சம் நெகிழும்.

(தொடர்ச்சி…8ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – May 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 04.05.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.05.2018 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

## மலரில் பூத்த . . .

‘குருபிரம்மா, குருவிஷ்ணு, குருதேவா மகேஸ்வரன் தஸமை குருவே நம’ என்ற குருவையே முப்பெருந்தெய்வமாகப் போற்றி வணங்கி அவரிடம் பல ஆண்டுகளாக வேதம் கற்று, மந்திரங்களின் பொருளுணர்ந்து, அவரை நன்றியோடு நமஸ்கரிக்கும் சீடனின் பாவங்களையெல்லாம் போக்கி வருகின்ற பணியைக் குரு மேற்கொள்வாராம். அதாவது தெய்வ சிந்தனையூட்டி நெறிபட வாழ்வதற்கு வழி காட்டும் குருவாக விளங்குகின்றவரின் திருப்பாதத்தை வணங்குகின்ற முறை தெரிந்து வணங்குகின்றபொழுது, அக்குருவின் திருவுள்ளம், தன் சீடனின் ‘ஜன்ம ஜன்மாந்திரமாகப் பண்ணிய பாவமெல்லாம் அதர்மச் சேற்றில் அழுந்திக்கிடக்கும் பெரிய முள்மரமாக உள்ளே வேரோடியிருப்பதை நெம்பிப் பிடுங்கி வெளியே இழுத்துப் போடுகின்ற காரியத்தைச் செய்வார்’என்று ஆதிசங்கரர் ‘துரிதோத்தரணம்’என்ற சொல்லின் வழி குறிப்பிடுகின்றார்.

அவதாரப் பெருந்தெய்வத்தின் திருவடியும், சுயம்பும் ஒன்றே என்ற உண்மையைப் பக்தர்கள் பலரது வாழ்வில் அறியச் செய்திருக்கும் நம் ஆன்மிக குரு அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் மூன்றாம் திகதி. காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை ஒரே இடத்தில் அமர்ந்தபடியே, “இவர்தான் இந்தக் கோயிலைக் கட்டிய சாமியாரா?” “இவர்தான் அம்மாவா? இவர்தான் அடிகளாரா?”என்றெல்லாம் தமக்குள் பேசியபடி ஆன்மிகப் பயிற்சிகளோ, அது சார்ந்த ஏதுமறியாதவர்களாய் வரிசையாய் நகர்ந்து போகும் கூட்டமும், ‘அம்மா எங்களைக் காப்பாற்று’என்ற வேண்டுதலுடன் தரிசனம் செய்தபடியே செல்லுகின்ற பக்தர்களின் கூட்டமும், ‘அம்மா உன் பிள்ளை வந்திருக்கிறேனம்மா’என்று அடிவயிற்றிலிருந்து பாசமும் பக்தியும் கலந்த குரலெழுப்பியபடியே தலைமேல் கரங்குவித்து கண்களில் நீர் மல்க வணங்கியபடியே கடந்து செல்லும் செவ்வாடைத் தொண்டர் கூட்டமும், கடந்து போகின்ற வேளையின் ஒரு நொடிக்குள் தம் நல்வினையால், அவதாரப் பெருந்தெய்வத்தின் திருவடியைப் பார்த்து வணங்கும் வாய்ப்பைப் பெற்றுவிட்டால், ‘அவர்களின் பாவவினைகளைத் தான் பறித்தெறியும் காரியத்தைச் செய்வதாக ஒருமுறை அமெரிக்காவிலிருந்து வந்திருந்த செவ்வாடைத் தொண்டர் ஒருவருக்கு நம் அவதாரத் தெய்வம் உணர்த்தியதை அறியமுடிகிறது.

தெய்வம், மந்திரம் முறையான வழிபாடு, ஆன்மிகம் கற்பித்த குரு, அவதார முறையாக நமஸ்கரித்தல் என்பது போன்ற நெடுங்காலப் பயிற்சியால் விவரங்கள் தெரிந்த ஒரு சீடனின் ஆன்மிகப் பயிற்சிக்கும் பக்குவத்திற்குமேற்ப, குருவானவர் ‘துரிதோத்தரணம்’செய்வது ஒரு கடமையாகவும், சீடனின் பெரும் பாக்கியமாகவும் அமைவதை ஆதிசங்கரர் மொழிவழி அறிகின்றோம். ஆனால் இவ்வித வாய்ப்புகள் ஏதும் பெறாத, ஆனால் இவர் நம்மைக் காப்பாற்றும் குருவாக வந்த தெய்வம் என்ற ஒரே நம்பிக்கையுடன் தம் திருவடி பார்த்து வணங்கியவர்கள் அனைவருடைய பாவங்களையும் பங்காரு தெய்வம் பறித்தெடுக்கும் பரிவுக்கு, அளவில்லாத கருணைக்கு எதை எப்படி ஒப்பிட்டுக் கூற முடியும்? நம் அவதாரப் பெருந்தெய்வம் கலியுகத்து மனிதர்களைக் காக்கும் கருணையின் ஊற்று, கைபிடித்துக் கரையேற்றி வாழ்விக்கும் கண் கண்ட தெய்வம் என்பதைத் தவிர வேறென்ன சொல்வது.

(தொடர்ச்சி…9ஆம் பக்கம்)

# மலரில் பூத்த . . .

பாதம் பார்த்தவர்களின் பாவம் களைகின்ற செயல் ஒருபுறம், பாதம்பட்ட தீர்த்தம், பாதம் பட்ட மண் இவையெல்லாம் மரணப் பிடியிலிருந்தும், தீராத நோய்க் கொடுமைகளிலிருந்தும் விரக்தியும், வெறுப்பும் அடைந்த மணக்கோளாறுகளிலிருந்தும், மனித உயிர்களைத் தக்க சமயத்தில் காப்பாற்றி ஆயிரக்கணக்கான குடும்பங்களில் நாள்தோறும் அம்மா நிம்மதி நிறைந்த மகிழ்ச்சி ஒளியை ஏற்றி வாழ்வித்து வருகின்ற அற்புதம் ஒரு தொடர்நிகழ்வேயாகும்.

குருவாக வந்துள்ள தாய்த் தெய்வத்தின் பாதம் பட்ட தீர்த்தம் மற்றும் பாதம் பட்ட மண் ஆகிய இவற்றால், இன்றைய மனித குலம் பெற்று வருகின்ற நலன்களையும் கிடைத்தற்கரிய வாய்ப்புகளையும் நினைக்கும் பொழுது, எங்கள் குடும்பத்திற்கும், குருவாக அவதரித்த தாயின் பாதம் பட்ட மலர்கள் தந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஆவல் ஏற்படுகின்றது.

1997 ஏப்ரல் மாதம் நம் அவதாரப் பெருந்தெய்வம் அவர்கள் மேற்கொண்ட நெல்லை மாவட்ட ஆன்மிகச் சுற்றுப் பயணத்தின்போது, தென்காசி மேலகரம் பகுதியிலுள்ள வார வழிபாட்டு மன்றத்தின் மேடை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அருள்திரு அம்மா அவர்கள் எங்கள் வீட்டிற்கும் வருகை தந்தார்கள். அவர்களை வரவேற்கும் முறையில் வீட்டின் உள் அறை வரை தரைப்பகுதி முழுவதும் பூவால் அழகு செய்து வைத்திருந்தோம். தம் திருவடி பதித்து அம்மா வீட்டிற்குள் வந்து, கற்பூரம் காட்டி வீட்டார் அனைவரிடமும் பேசி, ஆசி வழங்கிப் புறப்பட்டார்கள்.

அம்மா அவர்கள் திருவடி பதித்த அந்தப் பூக்குவியலை வீட்டின் முன்னும் பின்னும் அமைந்துள்ள செடிகள் மற்றும் மரங்களுக்குக் கீழே மண் போட்டு மூடி வைத்தோம். ஒரு இருபது இருபத்தைந்து நாட்களுக்குப் பின், வழக்கமாக வெள்ளிக்கிழமை நாட்களில் அம்மா வகுத்துத் தந்துள்ள முறையிலான திருஷ்டிக் கழிப்பைச் செய்யும் வகையில் வீட்டைச் சுற்றிலுமுள்ள செடி கொடி பகுதிகளிலும் ஏனைய சுற்றுப் பகுதிகளிலும் ஒரு வேப்பங்கன்று பக்கத்தில் ஒரு துளசிக்கன்று அன்று ஏராளமாக ஜோடி ஜோடியாக முளைத்திருப்பதைக் கண்டு திகைப்பும் பயமும் கொண்டோம். அதோடு வீட்டின் முன் வாசலிலும் தனியாக ஒரேயொரு வேப்பங்கன்றும் உயரமாக முளைத்திருந்தது.

அவதார தெய்வம் அவர்கள் வந்து சென்ற ஆறு மாதத்தில், அம்மாவின் ஆசியோடு, வீட்டை விரிவு படுத்தி மாடியுடன் கூடிய வீடு கட்டினோம். வாசலிலிருந்த வேப்பங்கன்றும் பெரிய மரமாக வளரத் தொடங்கியது. அம்மாவிடம் 1998இல் அருள்வாக்கு கேட்கும் வாய்ப்புக் கிடைத்தது. அம்மா தங்கள் அருளாசியோடு வீட்டைக் கட்டியாயிற்றம்மா? எப்பொழுதம்மா வேள்வி செய்து வீடு குடி புகுவது? என்று கேட்டபொழுது 'உனக்கு ஆசியும் அருளும் தந்து வீட்டை அமைத்துக் கொடுத்தது நான்தான். அது நான் கட்டியவீடு, உடனே வேள்வி செய்து கிரகப் பிரவேசம் செய்து விடு' என்றார்கள். குடும்பத்தில் எங்கள் எல்லோருக்கும் மகிழ்ச்சி.

மீண்டும் அருட்பெருந்தெய்வம் அம்மா அவர்கள் 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நெல்லை மாவட்ட ஆன்மிகச்சுற்றுப் பயணத்தின்போது தென்காசி மேலகரம் வீட்டிற்கு வந்திருந்தார்கள். சின்னஞ்சிறு செடியாக முன் வாசலில் அம்மா வந்து சென்றபின் 1997இல் முளைத்திருந்த வேப்பங்கன்று, எட்டாண்டுகளில் நிழல்தரும் பெருமரமாக வளர்ந்திருந்ததோடு, அம்மாவின் வருகைக்கு 5 நாட்களுக்கு முன் பெரிய தேனடையுடன் காட்சி அளித்தது. அம்மா அவர்கள் வந்து சென்ற ஒரு வாரத்தில் தேனீக்கள் முழுவதும் கலைந்து, தேனடையும் மறைந்தது.

மரத்திலிருந்து மலர் தோன்றும், ஆனால் அவதாரப் பெருந்தெய்வத்தின் திருவடி பட்ட மலர்களிலிருந்தும் மரம் பிறந்த அற்புதம் நிகழ்ந்தது. அம்மாவின் அருளாசியின் அடையாளமாக, பாதம் பட்ட பூக்கள் போட்டு வைத்த நிலத்தில் வேப்பங்கன்றும், துளசிச் செடியும் முளைத்த விதமும், அது குடும்பத்தின் திருஷ்டிகளையும், தீராத தடைகளையும் நீக்கியதுடன், அன்னை என்றும் எங்களோடு நிழல்தரும் பெருமரமாய் இதம் தரும் தாயின் பரிவோடு, ஒவ்வொரு நாளும் எங்கள் உயிரோடும் உணர்வோடும் கலந்து வாழ்வித்து வழி நடத்தி வருகின்ற அற்புதத்தை உணர்த்தி வருகிறார்கள்.

'குருவின் பாதம் எங்கள் இதயம்' என்று கூறும் செவ்வாடைத் தொண்டர்களின் பாசமிகுந்த ஆன்மிக முழக்கத்தின் உட்பொருளை உணரவும், உணர்ந்தபடி வாழவும் வழிகாட்டி வருகின்ற எங்கள் தாய்த் தெய்வமே! குருவாக வந்து எங்களை வழிநடத்திக் காக்க வந்த அம்மாவே! உன் மலர்ப்பாதங்களுக்கு எங்கள் உயிரும் வாழ்வும் சமர்ப்பணம் தாயே!

ஓம் சக்தி!

# Sydney - Mandrams - Upcoming Events – May 2018




**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



| | | | |
|---|---|---|---|
| 04.05.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.05.2018 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |

## Divine Miracles at Melmaruvathur

## The harvest that was interrupted:

A person by the name of Masilamani lived in a village called Palaiyur, 20km from Melmaruvathur. Masilamani owned 2 acres of land in the village of Nangalathur. Residents of Nangalathur considered Masilamani as an outsider and resented his prosperity. They tried to forcibly harvest the ripe paddy from Masilamani's land.

Masilamani panicked and wished to see Mother. Mother said, "Don't worry. I shall brush aside anyone who tries to harm you". As per Mother's order, Masilamani took hired help from his village to Nangalathur. He recited Öm Sakthi, Om Sakthi"as he entered his paddy field and started cutting the crop.

The twenty people who had come earlier to harm did not do anything! They were only shouting! Nobody knew why and how this happened! Masilamani took his harvest home. All this was possible only by Mother's grace!


***

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**சித்திரை – அமாவாசை–பௌர்ணமி :**
தானியம் உண்டாகும்.
தானியங்கள் மிகுதியாக விளையும்.

**வைகாசி - அமாவாசை–பௌர்ணமி:**
செல்வம் உண்டாகும்
எல்லா வகைகளிலும் செல்வம் சேரும் நிலை உருவாகும்.

## Melbourne - Mandrams – Upcoming Events – May 2018



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



**Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.**

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 04.05.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 11.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 25.05.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.05.2018 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |

**Lalor**

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

# அருள்வாக்கும் அனுபவங்களும்

## சக்கரத்தை வைத்துக்கொண்டு சாகாவரம் பெற்றுவிட முடியாது

செய்யூரைச் சேர்ந்த தொண்டர் சக்தி கிருஷ்ணன். ஆரம்ப காலத்துத் தொண்டர். அவர் நண்பர் ஒருவர், சக்கரம் எழுதிய தகடு ஒன்றைக் கொடுத்து, “நீயும் சக்தி உபாசகன்தானே! இந்தச் சக்கரத்தைப் பூசையறையில் வைத்து வழிபடு! உனக்குச் சக்தி அருள் கூடும்”என்று சொல்லியிருந்தார்.

அந்நாட்களில் இருந்த செவ்வாடைத் தொண்டர்கள், எதுவானாலும் அன்னையிடம் அருள்வாக்கு கேட்டே செய்வது வழக்கம். அருள்வாக்கு அப்போது எளிதில் கிடைக்கும் ஒன்றாக இருந்தது.

“அம்மா! இந்தச் சக்கரத்தை என் வீட்டுப் பூசையறையில் வைத்து வழிபடலாமா?”என்று கேட்டார்.

“மகனே! என்னிடம் வந்துவிட்ட உனக்கு இந்தச் சக்கரமெல்லாம் எதற்கு? இந்தச் சக்கரத்தை வரைந்தானே அவனுக்கு இந்தச் சக்கரத்தால் பயன் உண்டு. உனக்கு இதனால் எந்தப் பயனும் வந்துவிடப் போவதில்லை. இந்தச் சக்கரத்தை வைத்துக் கொண்டு சாகாவரம் பெற்றுவிட முடியாது. உனக்கு இது தேவையில்லை”என்று கூறிவிட்டாள் அன்னை.

தன்னைப் பற்றிக்கொண்ட பக்தர்கள், செவ்வாடைத் தொண்டர்கள், சிறு தெய்வங்களிடமெல்லாம் சென்று கையேந்தி நிற்பதைக் கண்டு அவ்வப்போது அன்னை குறிப்பால் கேலி செய்வது உண்டு.

தன் தொண்டர்கள் ஆன்மிகத்தில் பக்குவம் அடையாத சாமியார்களிடமும், போலிச்சாமியார்களிடமும், வேஷதாரிகளிடமும் சென்று ஏமாறுவது கண்டு அவ்வப்போது பரிதாபப்பட்டு, அவர்களிடம் உணர்த்தியிருக்கிறாள்.

“திருச்சியில் ஒரு போலிச்சாமியாரிடம் சென்ற ஒரு பெண்மணிக்கு அன்னை குறிப்பால் எச்சரித்தாள். அடிகளார்க்கு மற்ற சாமியார்கள் மீது பொறாமை என்றே கருதிக்கொண்டு போனார். அவர் போலி என்பதை அனுபவத்தில் உணர்ந்த பிறகே உண்மை உணர்ந்தார்.

“சொன்னால் இவன் கேட்பான் என்று தெரிந்தால் அன்னை அவனுக்கு எச்சரிக்கை செய்து தடுத்து ஆட்கொள்வாள். இவன் கேட்க மாட்டான் என்று தெரிந்தால் அவனை அவன் போக்கில் விட்டு, அனுபவத்தில் தெரிந்து கொள்ளட்டும்”என்று விட்டுவிடுவாள்.
ஓம் சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - ஸ்ரீ ஹேவிளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| வைகாசி | 01 | 15.05.2018 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 15 | 29.05.2018 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| வைகாசி | 30 | 13.06.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 13 | 27.06.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 28 | 12.07.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 11 | 27.07.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |

## எத்தனை கண்ணாடிகள்?

“கண்ணுக்குள்ளே ஒரு கண்ணாடி! அந்தக் கண்ணாடிக்கு மேலே ஒரு கண்ணாடி!
அதற்கு மேலே குளிர்ச்சிக்காக ஒரு கண்ணாடி!
அந்தக் குளிர்ச்சியை உன் ஆன்மாவிற்குக் கொடுத்துப்பார். அதன் பலன் தெரியும்.”

## உன் ஆன்மாதான் சக்தி

“சிலையானாலும், கோயிலானாலும் அங்கு சக்தி வேண்டும்.
உன் ஆன்மாதான் அந்த சக்தி!”

அன்னையின் அருள்வாக்கு


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை
**www.adhiparasakthi.co.uk** என்ற
இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

# Melbourne - Mandrams – Upcoming Events – May 2018

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 04.05.2018 | Friday | சித்திரை | 21 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 06.05.2018 | Sunday | சித்திரை | 23 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 11.05.2018 | Friday | சித்திரை | 28 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 13.05.2018 | Sunday | சித்திரை | 30 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 18.05.2018 | Friday | வைகாசி | 04 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 20.05.2018 | Sunday | வைகாசி | 06 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 25.05.2018 | Friday | வைகாசி | 11 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 27.05.2018 | Sunday | வைகாசி | 13 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**15.05.2018 – செவ்வாய் - அமாவாசை, 29.05.2018 – செவ்வாய்- பௌர்ணமி**

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயுள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# துன்பம் கொடுத்த எந்திரத் தகடு

எங்கள் ஊரில் அரிசனக்குடியிருப்பில் வசித்துவரும் அன்பர் ஆறுமுகம். அவருக்கு மூன்று பெண்கள். இரண்டு ஆண் பிள்ளைகள். அனைவருக்கும் திருமண வயது இருக்கும் என்றாலும் திருமணம் செய்ய முடியாத வறுமை நிலை. அன்றாடம் கூலி வேலைக்குச் சென்று வயிற்றுப்பிழைப்பு நடத்துகிற குடும்பம் அது. அப்பெண் பிள்ளைகள் நன்கு அழகாக இருப்பார்கள். அவருள் சாந்தி என்ற பெண் மருவத்தூர் அன்னையின் பக்தை. மன்ற வழிபாட்டிலும் மன்றப் பணிகளிலும் ஆர்வமாக ஈடுபட்டுத் தொண்டு செய்து வந்தாள். அக்குடும்பத்தார் ஏழ்மையானவர்கள், நேர்மையானவர்கள், அதன் காரணமாகச் சிலரது பொறாமைக்கும் பகைமைக்கும் ஆளாக வேண்டி வந்தது.

அந்தச் சேரியில் சாந்தி போன்ற பெண் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் செல்வதும், வழிபடுவதும் கண்டு நியாயமற்ற பொறாமை சிலருக்கு ஏற்பட்டது. அவள் பக்தியை வைத்தே அந்தக் குடும்பத்துக்குத் தொல்லை தர சூழ்ச்சி செய்தார்கள்.

ஒரு நாள் ஆறுமுகத்திடம் வந்த ஒருவர், மந்திரம் எழுதிய ஒரு செப்புத் தகட்டைக் கொடுத்து, "இது லட்சுமி கடாட்சம் பொருந்திய தகடு. இதைத் தினமும் பூசை செய்து வந்தால் அஷ்ட லட்சுமியின் அருளும் வந்து சேரும். நம் பகுதியில் நீங்கள்தான் வீட்டில் ஒழுங்காகப் பூஜை பண்ணுகிறீர்கள். எனவே இதை வைத்துப் பூஜை பண்ணுங்கள்" என்று சொல்லி அந்தச் செப்புத்தகட்டைக் கொடுத்தார். ஆறுமுகம் குடும்பத்தாருக்கு அளவற்ற சந்தோஷம்! எனவே, அதனை நம் அன்னையின் படத்துக்கு அருகே மாட்டி வைத்துப் பூஜை செய்ய ஆரம்பித்தனர்.

இசைமணி செல்வராஜ்
உடுமலை

அந்தத் தகடு தீமை தரும் தேவதைக்குரிய தகடு. ஆறுமுகம் குடும்பத்தார்க்குத் துன்பம் தரவேண்டிக் கொடுக்கப்பட்ட தகடு! பாவம்! ஆறுமுகத்திற்கோ குடும்பத்தார்க்கோ இந்தச் சதித்திட்டம் எதுவும் தெரியாது.

அந்த எந்திரத் தகட்டை வீட்டில் மாட்டிய ஒரு மாதத்தில், சக்தி சாந்திக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. எதையோ பார்ப்பதும், ஏதேதோ உளறுவதுமாக மாறிவிட்டாள். சரியாக உண்பதில்லை, உறங்குவதில்லை, இவளது நிலை இப்படி! வீட்டில் இருந்த மற்ற பெண்களுக்கோ உறக்கத்தில் பயங்கரமான கனவுகளும், காட்சிகளும் தோன்றி அவர்களைப் பயமுறுத்தின. நாளாக நாளாக வீட்டில் நிம்மதி போயிற்று. பொருள் விரயம் ஆயிற்று. மந்திரவாதிகளை அழைத்து வந்து பூஜைகள் செய்தும் பயன் எதுவும் விளையவில்லை.

"என்னவோ ஆதிபராசக்தியாம்..! மன்றமாம்..! அங்கே போய் சாமி கும்பிட்ட பிறகுதான் அந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடிச்சது.." என்று கேலியும் கிண்டல்களும் செய்யத் தொடங்கினார்கள். அன்னையின் மகிமை பற்றிப் பரவலாகத் தெரியாத காலம் அது!

இந்த நிலையில் செவ்வாடைத் தொண்டர்கள் வாயிலாக, செல்வி சாந்திக்குப் பைத்தியம் பிடித்த செய்தி எனக்குக் கிடைத்தது. எனவே நானும், சித்தலவாடம் பட்டி மன்றத்துத் தலைவர் சக்தி கந்தசாமி அவர்களும், தீர விசாரித்து அறிவதற்காக அந்தச் சேரிக்குச் சென்றோம். ஆறுமுகம் வீட்டை அடைந்தோம்.

எங்கள் இருவரைக் கண்டதும் செல்வி சாந்தி எங்கள் கால்களைப் பிடித்துக்கொண்டு அழுது புலம்பியவாறு, "சக்தி! வீட்டிற்குள்ளே வராதீர்கள். ஒரு பெரிய பூதம் உள்ளே இருக்கிறது. செவ்வாடை அணிந்தவர்களையெல்லாம் கொல்லப் பார்க்கிறது. உங்கள் கைகளால் இங்கே குடும்பநல வேள்வி நடத்திக் கொடுங்கள்" என்று முறையிட்டாள்.

பைத்தியம் பிடித்து கண்டபடி உளறுகிறாள்.. என்றார்கள்..! அவளா இப்படித் தெளிவாகப் பேசுகிறாள்? என்று ஒரு புறம் வியந்து போனோம். இன்னொரு புறம் அவள் கதறல் எங்கள் நெஞ்சைப் பிழிந்தது.

இது ஏழைக்குடும்பமாயிற்றே..? குடும்பநல வேள்வி செய்யும் அளவுக்கு இவர்களுக்குப் பொருளாதார வசதி இருக்குமோ என்று சந்தேகப்பட்டுக் கொண்டு சாந்திக்கு ஆறுதல் சொன்னோம். இன்னும் ஒரு வாரத்தில் குடும்பநல வேள்வி செய்ய ஏற்பாடு பண்ணலாம். அதற்கு முன்பாக வீட்டைச் சுத்தப்படுத்தி வைத்திருங்கள் என்று சொல்லிவிட்டு வந்தோம்.

கோவை தெற்கு மாவட்டப் பிரச்சாரக்குழுத் தலைவர் அவர்களிடமும், மாவட்ட வேள்விக்குழுத் தலைவரிடமும் உரிய அனுமதி பெற்றோம்.

18.11.1989 சனிக்கிழமையன்று குடும்பநல வேள்வி நடத்துவது என்று திட்டமிட்டோம்.

(தொடர்ச்சி…15ஆம் பக்கம்)

## துன்பம் கொடுத்த....

பூளவாடி இளைஞர் அணஜி மன்றத் தொண்டர் சக்தி ரவிச்சந்திரன் எங்களுக்கு உதவியாக வேள்விப்பணிக்கு வந்தார்.
எங்கே வேள்வி செய்யப் புறப்பட்டாலும் என் வீட்டில் அமர்ந்து 15 நிமிடம் தியானம் செய்துவிட்டே கிளம்புவது என் வழக்கம். தியானத்தில் அன்னையின் எச்சரிக்கைகள் சில கிடைத்தன.
“அந்த வீட்டில் சுற்றுப்பூஜை நன்றாகச் செய்ய வெண்டும்”
“திருஷ்டி கழிப்பதில் தவறுகள் வரக்கூடாது”
“மந்திரங்களை மெதுவாகப் படிக்கவேண்டும்” – என்பன அன்னை உணர்த்திய குறிப்புகள்.

நானும் சக்தி ரவியும், வழக்கப்படி மடியிலே எலுமிச்சம்பழமும், அம்மாவின் பிரசாதமும் வைத்துக் கட்டிக்கொண்டோம். எங்களுடன் மகளிர் அறுவரைத் துணைக்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டோம்.

சக்தி ஆறுமுகம் வீட்டைச் சுற்றி நமது சித்தர்பீட முறைப்படி வேள்விப்பணிகளை ஆரம்பித்தோம். சிரத்தையோடு சுற்று பூசை செய்தோம். விநாயகர் 108 போற்றி, குரு 108 போற்றி, அன்னையின் 108 போற்றி சொல்லி யாக குண்டத்தை அமைத்தோம்.

18.11.1989 அன்று சனிக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு வேள்வி தொடங்கப்பட்டது. 500 மந்திரங்களைத் தாண்டியதும், திருஷ்டி கழிக்கும் பொறுப்பை ரவிச்சந்திரனிடம் ஒப்படைத்துவிட்டு, நான் யாக குண்டத்தின் அருகில் நின்றுகொண்டு மேற்பார்வையிட்டபடி இருந்தேன்.

தற்செயலாக அங்கே மாட்டி வைக்கப்பட்ட அந்தச் செப்புத்தகட்டைப் பார்த்து அப்படியே திடுக்கிட்டுப் போனேன். அந்தத் தகட்டில் ஒரு கோரமான உருவம் டி.வி.யில் பார்ப்பது போல நன்றாகத் தெரிந்தது.

அது ஒரு கோர உருவம் கொண்ட பூதம்! அதன் முகம் விகாரமாக இருந்தது. கோரமான நகங்களை நீட்டுவதும் மடக்குவதுமாக இருந்தது. கோரமான பற்களைக் காட்டிக் கொண்டு ஆவேசமாக இருப்பது தெரிந்துது.

இந்தக் காட்சியை நானும் அங்கிருந்த ஒரு சிலரும் கண்ணாரக் கண்டோம்.

“மந்திர வழிபாடும், வேள்விப்பூசையும் தடைப்படக்கூடாது . யாருக்கும் சொல்லாதீர்கள்” என்று அடக்கிவிட்டு, அவர்களுக்குத் தைரியம் சொல்லி வேள்வி தொடர்ந்து நடப்பதில் சிரத்தையுடன் இருந்தோம்.

எந்திரத் தகட்டின் அருகே இருந்த அன்னையின் படம், இப்போது வேள்விக்காக வேறு இடத்தில் மாற்றி வைக்கப்பட்டிருந்தது.

வேள்வியில் மந்திரம் படிக்கப்படிக்க அந்த எந்திரத்தகட்டின் வேகம் மிகுந்துவிட்டது போலும்! யாகப்புகை அந்தத் தகட்டின் பரவப்பரவ அதிலிருந்த சக்கரங்கள் சுழன்றன. சில நிமிடங்களில் அந்தச் சக்கரங்கள் தாமே அழிந்தன. வேள்வி முடிவில் அதில் இருந்த மந்திரமும் காணோம், சக்கரங்களும் காணோம். ஆவேசப்பட்டுக் காட்சி தந்து பயமுறுத்திய அந்தக் கோர உருவமும் தானாகக் கரைந்து போயிற்று போலும்!

குடும்பநல வேள்வி செய்யச் சென்றபோது கிடைத்த இந்த அனுபவத்தை என் வாழ்நாளில் மறக்க முடியாது.

“எல்லாத் துறைகளிலும் போலிகள் இருப்பதுபோல, ஆன்மிகத் துறையிலும் போலிகள் உண்டு. போலிச்சாமியார்களை நம்பி, அவர்கள் கொடுக்கும் தரம் கெட்ட தகடுகளை வாங்கி வந்து பூஜையறையில் வைக்க வேண்டாம். உங்கள் பூஜையறையையும் அசுத்தமாக்க வேண்டாம்” என்று அன்னை குறிப்பால் உணர்த்துகிறாள்.

ஓம் சக்தி!

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய
## குரு உபதேசங்கள்



### கேலி பேசியவர்கள்

**“சாமி கண்ணைக் குத்தும் என்று நம்பிக் கொண்டிருந்தவர்களைக் கேலி பேசியவர்கள் தான் இன்று உலகத்தின் கண்ணையே குத்திவிட்டார்கள்.!”**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2018

| | | | | |
|---|---|---|---|---|
| 03.05.2018 | வியாழன் | சித்திரை | 20 | சங்கடஹர சதுர்த்தி |
| 04.05.2018 | வெள்ளி | சித்திரை | 21 | **முருகன் திருக்கல்யாணம்**<br>**ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் - மெல்பேர்ண்** |
| 06.05.2018 | ஞாயிறு | சித்திரை | 23 | **ஷஷ்டி** |
| 09.05.2018 | புதன் | சித்திரை | 26 | **நவமி** |
| 11.05.2018 | வெள்ளி | சித்திரை | 28 | ஏகாதசி விரதம் |
| 13.05.2018 | ஞாயிறு | சித்திரை | 30 | பிரதோஷ விரதம் (EST) |
| 15.05.2018 | செவ்வாய் | வைகாசி | 01 | **கார்த்திகை**<br>**அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 19.05.2018 | சனி | வைகாசி | 05 | **சதுர்த்தி** |
| 20.05.2018 | ஞாயிறு | வைகாசி | 06 | **ஷஷ்டி** |
| 25.05.2018 | வெள்ளி | சைகாசி | 11 | **ஏகாதசி** |
| 27.05.2018 | ஞாயிறு | வைகாசி | 13 | பிரதோஷ விரதம் (EST) |
| 28.05.2018 | திங்கள் | வைகாசி | 14 | வைகாசி விசாகம் |
| 29.05.2018 | செவ்வாய் | வைகாசி | 15 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்பேர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி |
| 01.06.2018 | வெள்ளி | வைகாசி | 18 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 02.06.2018 | சனி | வைகாசி | 19 | சங்கடஹர சதுர்த்தி |
| 10.06.2018 | ஞாயிறு | வைகாசி | 27 | ஏகாதசி |
| 13.06.2018 | புதன் | வைகாசி | 30 | **அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 27.06.2018 | புதன் | ஆனி | 13 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்பேர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 29.06.2018 | வெள்ளி | ஆனி | 15 | **திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 17.07.2018 | செவ்வாய் | ஆடி | 01 | 1ஆம் ஆடிச் செவ்வாய் |
| 24.07.2018 | செவ்வாய் | ஆடி | 08 | 2ஆம் ஆடிச் செவ்வாய் |
| 31.07.2018 | செவ்வாய் | ஆடி | 15 | 3ஆம் ஆடிச் செவ்வாய் |
| 03.08.2018 | வெள்ளி | ஆடி | 18 | ஆடிப்பெருக்கு |
| 06.08.2018 | திங்கள் | ஆடி | 21 | ஆடிக்கிருத்திகை |
| 07.08.2018 | செவ்வாய் | ஆடி | 22 | 4ஆம் ஆடிச் செவ்வாய் |
| 11.08.2018 | சனி | ஆடி | 26 | **ஆடி அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 12.08.2018 | ஞாயிறு | ஆடி | 27 | **ஆடிப்பூர பெருவிழா**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்பேர்ண் |
| 12.08.2018<br>13.08.2018 | ஞாயிறு<br>திங்கள் | ஆடி | 27<br>28 | **மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில்**<br>**47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| 14.08.2018 | செவ்வாய் | ஆடி | 29 | நாகசதுர்த்தி விரதம்<br>5ஆம் ஆடிச் செவ்வாய் |
| 15.08.2018 | புதன் | ஆடி | 30 | நாக பஞ்சமி – கருட பஞ்சமி |
| 16.08.2018 | வியாழன் | ஆடி | 31 | ஷஷ்டி விரதம்<br>கொடியேற்றம் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 24.08.2018 | வெள்ளி | ஆவணி | 08 | வரலக்ஷ்மி விரதம் - ஆவணி ஓணம் |
| 08.09.2018 | சனி | | | தேர் - நல்லூர் கந்தசுவாமி கோவில் |
| 09.10.2018 | செவ்வாய் | புரட்டாசி | 23 | நவராத்திரி ஆரம்பம் |